## வடக்கு மாகாணத்திற்கான உள்நாடடு மட்ட போசாக்கு தலையீட்டு செயற்திட்டம் - 2012

### 1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துங்களுக்கிணங்க 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கட்டுநிதி நிதியக் கணக்கிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப் பட்டிருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா 166,993,180 ஆகவும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 191,834,422 ஆகவும் இருந்தது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பு கீழே தரப்படுகின்றது

| செலவின விடயங்கள் | 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| **ஆக்கக் கூறு 1** | ரூபா | ரூபா | ரூபா |
| குறைநிரப்பு உணவு பங்கீடு வழங்கல் | 96,080,089 | 150,000 | 96,230,089 |
| **ஆக்கக் கூறு 2** | | | |
| இயலளவைக் கட்டியெழுப்புதலும் சமுதாய ஈடுபடுத்தலும் | 32,044,875 | 2,525,747 | 34,570,622 |
| **ஆக்கக் கூறு 3** | | | |
| சமுதாய அடிப்படை போசாக்கு தலையீடு | 36,697,964 | 22,027,729 | 58,725,693 |
| **ஆக்கக் கூறு 4** | | | |
| செயற்திட்ட மேற்பார்வை, கண்காணிப்பு மற்றும் மதிப்பாய்வு மற்றும் பரிந்துரைத்தல் | 2,170,252 | 137,766 | 2,308,018 |
| | 166,993,180 | 24,841,242 | 191,834,422 |

## 2.2 கட்டுநிதி நிதியக் கணக்கு

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி, 2012 ஆம் ஆண்டின் போது கட்டுநிதி நிதியக் கணக்கின் தொழிற்பாடுகள் மற்றும் அத்திகதியில் உள்ளவாறு இக்கணக்கில் கிடைக்கக் கூடிய மீதி என்பன கீழே தரப்படுகின்றன.

| | ஐ.அ.டொலர் | ரூபா |
|---|---|---|
| 2012 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 226,682 | 25,819,392 |
| கூட்டு :- மீள்நிரப்பல்கள் | 1,700,000 | 220,190,600 |
| வெளிநாட்டு நாணய மாற்று நட்டம் | - | (789,677) |
| | 1,926,682 | 245,220,315 |
| கழி :- பற்றுதல்கள் | 1,158,151 | 147,493,283 |
| 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | **768,531** | **97,727,032** |

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பதற்கான அடிப்படை மற்றும் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் என்பன நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னைய கணக்கீட்டுக் காலத்தின் நேரொத்த தொகைகள் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) 1989 யூன் 16 இன் 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின்படி செயற்திட்டத்தால் நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. மேலும், 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச்

சுற்றறிக்கையின்படி கணனிகள், உபபாகங்கள் மற்றும் மென்பொருள்களிற்கான நிலையான சொத்துப் பதிவேடும் பேணப்பட்டிருக்கவில்லை.

## 3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

(அ) நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட பின்வரும் விடயங்களை அவை ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பட்ட சான்றுகள் இன்மையால் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியவில்லை.

| விடயங்கள் | பெறுமதி ரூபா | கிடைக்கப்பெறாத சான்றுகள் |
|---|---|---|
| உள்நாட்டுப் பயிற்சி | 3,305,147 | மதிப்பாய்வு அறிக்கைகள் |
| ஆலோசனை | 654,600 | இறுதி அறிக்கைகள் |
| | **3,959,747** | |

## 3.3 சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

(அ) ரூபா 2.5 மில்லியன் ஒப்பந்தப் பெறுமதியில் ஆலோசனை நிறுவனமொன்று 2006 இன் கொள்வனவு வழிகாட்டல்களின் 2.14 ஆம் பிரிவின்படியான கொள்வனவு நடைமுறையை பின்பற்றாமல் தெரிவுசெய்யப்பட்டிருந்தது. இது தொடர்பில் சுகாதார மேம்பாட்டு மன்றம் மட்டும் நடத்தை மாற்ற தொடர்பாடலை ஆலோசனை செய்வதற்கான ஒரு நிறுவனமாக உள்ளது, இந்த நிறுவனம் அதே துறையில் 15 ஆண்டுகள் அனுபவம் வாய்ந்தது என்று செயற்திட்டப் பணிப்பாளர் குறிப்பிட்டிருந்தார்.

## 3.4 செயற்திட்ட நடவடிக்கைகளின் தொடக்கம்

2012 திசெம்பர் 31 வரை 48 % செயற்திட்டக் காலம் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் கீழ் குறிப்பிட்ட செயற்திட்டத்தின் ஒன்பது நடவடிக்கைகள் 2013 மார்ச் 31 வரை தொடங்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில், ரூபா 13,533,850 மதிப்பிடப்பட்ட பெறுமதியாக செயற்திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட ஒன்பது நடவடிக்கைகள் தொடங்காமைக்கான காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்ட்டிருக்கவில்லை.

| **ஆக்கக்கூறு - II** | **தொகை (ரூபா)** |
|---|---|
| பிரதி சுகாதாரப் பணிப்பாளரால் நிகழ்த்தும் மாவட்ட மற்றும் எம்ஓஎச் மட்டங்களில் சமுதாய பரிந்துரை மற்றும் உணர்வூட்டல் கூட்டம் | 169,070 |
| பொது சுகாதார தாதிமார் மற்றும் சமூதாய சுகாதார வசதியாளர்களால் நிகழ்த்திய கிராம சேவகர் மட்டத்திலான சமுதாய சமுதாய பரிந்துரை மற்றும் உணர்வூட்டல் கூட்டம் | 596,640 |
| பெண்களின் / சமுதாய தொகுதியின் ஆலோசனையை இனங்காணல் மற்றும் வலுப்படுத்தல் | 9,999,550 |
| | 10,765,260 |

**ஆக்கக்கூறு - III**

| | |
|---|---|
| அபிவிருத்தி தகவல்தொடர்பு நிபுணத்துவ போசாக்கு ஆலோசனையாளர் | 450,010 |
| போசாக்கு ஆலோசனையாளர் | 299,970 |
| வீட்டு தோட்ட தொழில்நுட்பங்கள் / சுய நம்பிக்கைக்கான வீட்டுத் தோட்டம் | 418,550 |
| | 1,168,530 |

**ஆக்கக்கூறு - IV**

| | |
|---|---|
| செயற்திட்ட மேற்பார்வை பரிந்துரை மற்றும் கண்காணிப்பு மற்றும் மதிப்பாய்வு ஆலோசனை | 299,970 |
| கண்காணிப்பு மற்றும் மதிப்பாய்வு இனங்காணல் மீதான செயலமர்வுகள் மற்றும் குறிகாட்டிகள் மற்றும் கண்காணிப்பு பொறிமுறை மீதான உடன்பாடு | 250,030 |
| பிரதேச மட்ட செயலமர்வுகள் | 1,050,060 |
| | 1,600,060 |

**3.5 திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு**

குறித்த செயற்திட்ட காலத்திற்குள் செயற்திட்ட குறிக்கோள்கள் எய்தலை உறுதிப்படுத்துவதற்காக மானிய உடன்படிக்கையின் 4 ஆம் பந்தியின்படி அனைத்து செயற்திட்டக் காலத்தையும் உள்ளடக்கியதாக பொறுப்புக்களை தீர்மானிக்கும் மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த ரீதியாக நிதி மற்றும் பௌதீக இலக்குகளை எய்த வேண்டிய கிடைக்கத்தக்க வளங்களை குறிக்கும் ஒட்டுமொத்த விரிவான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் அத்தகைய திட்டம் தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

**4 நிதிகளின் பயன்பாடு**

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வுக்கு கிடைக்கப்பெற்ற ஏனைய தகவல்களின்படி. ஆண்டிற்காக கிடைத்த ரூபா 246,009,992 ஆன நிதிகளில், ரூபா 147,493,283 ஆன தொகை மாத்திரமே மீளாய்வாண்டின் போது செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது அது ஒதுக்கப்பட்ட நிதிகளின் 60% ஐ பிரதிநிதித்துவப்படுத்துகின்றது

**5. செயலற்றல் மீளாய்வு**

**5.1 இலக்கிடப்பட்ட கர்ப்பிணித்தாய்மார் மற்றும் பாலுட்டும் பெண்கள் மற்றும் 2 வயதுக்கு குறைந்த சிறுவர்களிற்கான உணவு வழங்கல் (ஜீவபாச)**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அ) உலக வங்கி செயற்குழு மூலம் சிபார்சு செய்யப்பட்டவாறு பிராந்திய சுகாதார பணிப்பாளர் அலுவலகத்தின் ஈடுபாட்டுடன் மாவட்ட மட்டத்தில் குறைநிரப்பு உணவு வேண்டுகை மற்றும் பெறுவனவு படிவங்கள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில், இது அமுலாக்கப்பட்ட போதிலும் அது அறிக்கையிடலிற்காக பாதிக்கப்பட்டுள்ளது என்று செயற்திட்ட பணிப்பாளர் குறிப்பிட்டார்.

ஆ) குறைநிரப்பு உணவு வழங்கலின் ஆரம்பத்திலிருந்து குறைநிரப்பு உணவு வழங்கல் நலனாளிகளின் விரிவான தரவு அடிப்படையுடன் கண்காணிப்பு முறைமை மற்றும் அவர்களுடைய போசாக்கு நிலை என்பன செயற்திட்டத்தால்

கடைப்பிடிக்கப்படவில்லை. இது தொடர்பில் ‘‘முன்னைய படிவம் மேற்பார்வைக்கு பொருத்தமற்றிருந்தமையால் படிவம் எம் மற்றும் ஈ குழு உறுப்பினர்களுடனான கலந்துரையாடலின்படி மாற்றப் பட்டிருந்ததுடன் தற்போது புதிய படிவம் பயன்படுத்தப்படுகின்றது’’ என்று செயற்திட்டப் பணிப்பாளர் குறிப்பிட்டிருந்தார்.

## 5.2 வடக்கு மாகாண சுகாதார மேம்பாட்டிற்கான ஆலோசனை சேவை - ரூபா 654,600

மேற்குறிப்பிட்ட நடவடிக்கை 2012 ஆம் ஆண்டிற்காக ரூபா 2,523,000 ஆன மேலதிக தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 654,600 மாத்திரமே செலவழிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அ) பயிறிசிக் குறிப்பின் இணைப்பு ‘‘ஏ’’ இன்படி பயிற்சி மேற்கொள்ளப்பட்டிருக்வில்லை.

ஆ) செயலாற்றல் மீளாய்விற்காக நடைபெற்ற 4 கூட்டங்களில் ஆலோசனையாளர்கள் பங்குபற்றியிருக்காததுடன் 2012 யூலை மாதத்தில் நடைபெற வேண்டுமென வேண்டப்பட்ட கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டிருக்கவில்லை.

இ) காலாண்டு அறிக்கைகள் பெற்றுக் கொள்ளாமல் ஆலோசனையாளருக்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. நிபந்தனைக் குறிப்பின்படி மீளாய்வாண்டிற்காக ஆலோசனையாளரால் சமர்ப்பிக்க வேண்டிய நான்கு காலாண்டு அறிக்கையில் ஒரு அறிக்கை மாத்திரம் ஆலோசனையாளரால் சமர்ப்பிக்கப்பட்டது.

ஈ) ஒப்பந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு காப்புறுதி மேவுகை ஆலோசனையாளரால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

உ) முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிற்கான களப் பரிசோதனைகள் ஆலோசனையாளரால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் செயற்திட்டப் பணிப்பாளர், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் சம்பந்தப்பட்ட தொழில்கள் நபர்கள் குறைவானமையால் சுகாதர மேப்பாட்டு வசதியாளர்கள் (எச்பிஎவ்) ஆலொசனையாளராக நியமிக்கப்பட்டிருந்தனர் தாய்

சேய் சுகாதாரத்தின் மருத்துவ உத்தியோகத்தர் (எம்ஓஎம்சீஎச்) மற்றும் சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் (எம்ஓஎச்) என்போர் சகல ஐந்து மாவட்டங்களிலும் செயற்திட்டத்துடன் தொடர்புபட்ட பணிகளை நிறைவேற்றுகின்றனர் என்று குறிப்பிட்டிருந்தார்.

## 5.3 கொள்வனவு நடைமுறை

அ) வடக்கு மாகாண சபையின் சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு செயலாளரால் வழங்கப்பட்ட 2012 திசெம்பர் 13 ஆந் திகதிய ஜேஎஸ்டிஎவ்/என்யூரி/என்பி/ஜீஓஓடி/13 ஆம் இலக்க கடிதத்தின்படி, 2012 திசெம்பர் 31 வரை பல அளவுகருவிகள் கொண்டுவரப்பட்டிருக்காததுடன் வேண்டப்பட்டவாறு நிறுவுதல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக ரூபா 6,645,532 பெறுமதியான மேற்குறிப்பிட்ட அளவைக் கருவிகள் நோக்கங்கள் இன்னமும் அடையப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் செயற்திட்டப் பணிப்பாளர் உயரம் மற்றும் நிறுவையிடல் கருவிகள் இலக்கு இடத்தின் கிடைக்கக்கூடிய அளவு மற்றும் கிடைக்க முடியாத போக்குவரத்தின்மை காரணமாக குறித்த காலத்திற்குள் கொண்ருவரப்பட்டிருக்கவில்லை. தற்போது அந்தக் கருவிகள் அமைச்சின் உயிரியல் மருத்துவ தொழில் நுட்பவியலாளரின் மேற்பார்வையில் குறித்த இடத்தில் பொருத்தப்பட்டிருக்கின்றன என்று குறிப்பிட்டிருந்தார்.

ஆ) ஐந்து கேள்விகளிற்குப் பதிலாக மூன்று கேள்விகளை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையால் 2006 கொள்வனவு வழிகாட்டிகளின் 2.14.1 ஆம் பிரிவுக்கு முரணாக ரூபா 1,683,400 பெறுமதிக்கு 6 எண்ணிக்கையான பஜாச் டிஸ்கவரி 150 மற்றும் 2 எண்ணிக்கையான ரீவீஎஸ் ஸ்கூட்டி பெப்ற் மோட்டார் சைக்கிள்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

| **விடயங்கள்** | **பெறுமதி ரூபா** |
|---|---|
| 6 எண்ணிக்கையான பஜாச் டிஸ்கவரி 150 | 1,287,600 |
| 2 எண்ணிக்கையான ரீவீஎஸ் ஸ்கூட்டி பெப்ற் | 395,800 |
| | 1,683,400 |

இ) உலக வங்கியானது மாதர் சங்கங்களிற்கு ஆதரவளிப்பதற்கு சிபார்சு செய்திருந்த போதிலும் ஆக்கக்கூறு 3 இன் கீழ் மாதர் சங்கங்களிற்கு

கொள்வனவுகளெதுவும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 5.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

வயதுவந்தோருக்காக 100 எண்ணிக்கை மற்றும் குழந்தைகளிற்காக 80 எண்ணிக்கையுடன் நிறை அளவை தராசுகள் 2012 திசெம்பர் 31 வரை செயற்பாட்டு முறைமை அறிமுகப்படுத்தாமை காரணமாக வட மாகாணத்தின் சுகாதார மருத்துவ உத்தியோகத்தரின் அலுவலகத்தில் 2012 நவம்பர் மாதத்திலிருந்து பயன்பாடின்றி வைக்கப்பட்டிருந்தன. 2013 பெப்ரவரி 22 இல் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையில் மேற்குறிப்பிட்ட நிறை அளவை தராசுகள் நலனாளிகளின் தெரிவுக்கு பின்னர் சுகாதார மருத்துவ உத்தியோகத்தர்களிற்கு விநியோகிக்கப்பபடுமென அறிவிக்கப்பட்டது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| மாவட்டம் | வயதுவந்தோர் | குழந்தைகள் |
|---|---|---|
| யபழ்ப்பாணம் | 17 | 14 |
| கிளிநொச்சி | 24 | 18 |
| வவுனியா | 17 | 14 |
| முல்லைத்தீவு | 24 | 18 |
| மன்னார் | 18 | 16 |
| | 100 | 80 |

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) கொள்வனவுகள்

(இ) ஆலோசனை